# கொங்கு நண்பர்கள் இதழ்

பதிவு எண். : 248/2012

திருவள்ளுவர் ஆண்டு 2042 (கார்த்திகை–மார்கழி) டிசம்பர் 2012 ஏர்-01, உழவு-06, விலை ரூ.10.00

பதிப்பாளர் :
கே.பாலசுப்பிரமணி
கொங்கு நண்பர்கள் இதழ்
ஆசிரியர் & பதிப்பாளர்
H-71, 5வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 102.
செல் : 93815 45452

அச்சகம் :
மரியம் இப்ராஹிம்
பிராம்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நெ.49/37, வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| நிர்வாகிகள் தேர்தல் | - | 3 |
| கட்டட நிதி | - | 5 |
| வேண்டுகோள் | – | 6 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – | 7 |
| வாழ்த்துக்கள் | – | 8 |
| பொதுக்குழு கூட்டம் | - | 10 |
| மதிப்புரை | - | 19 |
| சாதனையாளர் | - | 20 |
| என்றும் நலமுடன் வாழ | - | 23 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 27 |
| மணமகள் தேவை | - | 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / கொங்கு நண்பர்கள் இதழ் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,



வணக்கம். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் 25–11–2012 அன்று வெள்ளிவிழா இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. அன்றே 2012–2014 ஆம் ஆண்டுக்கான சங்க நிர்வாகிகள் தேர்தல் சங்க விதிப்படி தேர்தல் குழு பொறுப்பாளர்கள் தலைமையில் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகுந்த பணிகளுக்கிடையே சிரமம் பார்க்காமல் நேரம் ஒதுக்கி சங்க நிர்வாகிகள் தேர்தலை சீரிய முறையில் நடத்தி முடிவுகளை அறிவித்த தேர்தல் குழு தலைவர் கொங்குமாமணி திரு.எம்.முருகேசன், உறுப்பினர்கள் முன்னாள் தலைவர் திரு.எஸ்.அருணாசலம், கொங்குமாமணி திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேலு ஆகியோருக்கு சங்கத்தின் சார்பிலும் எனது சார்பிலும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். தத்தம் துறையில் சாதனைகள் புரிந்துள்ளதோடு வியத்தகு வகையில் சமுதாயச் சேவையாற்றிடும் இந்தச் சான்றோர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாகவும், சமுதாயக் கடமையாற்ற ஊக்கமளிப்பவர்களாகவும் உள்ளனர் என்பதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

பெருவாரியான வாக்குகள் அளித்து, இரண்டாவது முறையாக என்னைத் தலைவர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னோடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணைத்தலைவர்கள் திரு.பி.சென்னியப்பன், திரு.கே.ஏ.கணபதி, செயலாளர் திரு.கே.கே.ரமேஷ், பொருளாளர் திரு. வி.பி.செங்கோட்டுவேல், இணைச்செயலாளர்கள் திரு.எஸ்.ஆர்.ராஜேந்திரன், திரு.வி.பி.வீரப்பன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் திரு.கே.இராஜாமணி, திரு.ஆர்.சண்முகவேல், திரு.பி.கே.ஈஸ்வரமூர்த்தி, திரு.எம்.எஸ்.சங்கமேஸ்வரன், திரு. எம்.அமராபதி, திரு.வி.ஆர்.பாலசுப்பிரமணியன், திரு.பி.தியாகராசன், திரு.ஆர்.பூபதி, திரு.எஸ்.சிவசாமி, திரு.பி.ரவி, திரு.ஏ.பாலு, திரு.கே.என்.முத்து ஆகியோருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் செயற்குழு இன்னும் அதிக அளவில் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் சங்கத்தின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபடும் என்ற உறுதிமொழியை அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

சங்கம் சிறப்பாகச் செயல்பட உறுப்பினர்களின் ஆலோசனைகளும், கருத்துகளும் மிகவும் இன்றியமையாதன என்பதால் உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனைகளை எனக்கு அலைபேசி மூலமோ, கடிதம் மூலமோ தெரிவிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளும் செயலாளர் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாகப் பணியாற்றிய திரு.ஆர்.செல்வராஜ் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமைமிகு நமது சங்கம் தங்கள் அனைவரது ஒத்துழைப்போடும் ஆதரவோடும் மேலும் சிறப்பாகச் செயல்பட அயராது உழைப்போம் என்று மீண்டும் உறுதி கூறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

தொடர்புக்கு :
98410 21199

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# நிர்வாகிகள் தேர்தல்

தேர்தல் குழு : தலைவர் கொங்குமாமணி திரு.எம்.முருகேசன்
உறுப்பினர்கள் : திரு.எஸ்.அருணாச்சலம் (முன்னாள் தலைவர்)
கொங்குமாமணி திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேலு

25-11-2012 அன்று நடைபெற்ற 2012-2014 ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாகிகள் தேர்தல் முடிவுகள்

மொத்தம் பதிவான வாக்குகள் 174, அதில் 1 வாக்கு செல்லாதவை.

| எண். | பதவி | போட்டியிட்டவர்கள் | ஊர் | பெற்ற வாக்குகள் | முடிவுகள் |
|---|---|---|---|---|---|
| 1. | தலைவர் | **1. கே.பாலசுப்பிரமணி** | சென்னை | **172** | வெற்றி |
| | | **2. கே.கிருஷ்ணசாமி** | சென்னை | **1** | தோல்வி |
| 2. | செயலாளர் | **1. கே.கே.ரமேஷ்** | சென்னை | **172** | வெற்றி |
| | | **2. ஜெ.ஆனந்த்** | சென்னை | **1** | தோல்வி |
| 3. | இ.செயலாளர் II | **1. வி.பி.வீரப்பன்** | நாமக்கல் | **169** | வெற்றி |
| | | **2. ஏ.கண்ணன்** | நாமக்கல் | **1** | தோல்வி |
| 7. | பொருளாளர் | **வி.பி.செங்கோட்டுவேல்** | சென்னை | **171** | வெற்றி |
| | | **எஸ்.இராமசாமி** | சென்னை | **1** | தோல்வி |

### போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| துணைத்தலைவர் I | **கே.ஏ.கணபதி** | சென்னை |
| துணைத்தலைவர் II | **பி.சென்னியப்பன்** | சோமனூர் |
| இணைச்செயலாளர் I | **எஸ்.ஆர்.இராஜேந்திரன்** | சென்னை |

❖❖❖❖❖

25-11-2012 அன்று நடைபெற்ற 2012-2014 ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாகிகள் தேர்தல் முடிவுகள்

மொத்தம் பதிவான வாக்குகள் 174, அதில் 1 வாக்கு செல்லாதவை.

செயற்குழு உறுப்பினர்கள்

சென்னை மெட்ரோ பாலிடனுக்கு உட்பட்டவர்கள்

| எண். | போட்டியிட்டவர்கள் | ஊர் | பெற்ற வாக்குகள் | முடிவுகள் |
|---|---|---|---|---|
| 1. | எம்.அமராபதி | சென்னை | 168 | வெற்றி |
| 2. | வி.ஆர்.பாலசுப்பிரமணியன் | சென்னை | 167 | வெற்றி |
| 3. | ஆர்.பூபதி | சென்னை | 166 | வெற்றி |
| 4. | பி.கே.ஈஸ்வரமூர்த்தி | சென்னை | 166 | வெற்றி |
| 5. | ஆர்.சண்முகவேலு | சென்னை | 164 | வெற்றி |
| 6. | எம்.எஸ்.சங்கமேஸ்வரன் | சென்னை | 163 | வெற்றி |
| 7. | கே.இராஜாமணி | சென்னை | 162 | வெற்றி |
| 8. | பி.தியாகராஜன் | சென்னை | 161 | வெற்றி |
| 9. | பி.ராஜீ | சென்னை | 9 | தோல்வி |
| 10. | பி.முருகேசன் | சென்னை | 5 | தோல்வி |
| 11. | எஸ்.கே.முத்துமணி | சென்னை | 5 | தோல்வி |

**போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

செயற்குழு உறுப்பினர்கள்

சென்னை மெட்ரோ பாலிடனுக்கு வெளியே

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.சிவசாமி | கோயமுத்தூர் |
| 2. | பி.இரவி | திருச்செங்கோடு |
| 3. | ஏ.பாலு | ஈரோடு |
| 4. | கே.என்.முத்து | திருப்பூர் |

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 73,04,537 |
| 1752 | 180 | P.ரங்கசாமி | 1000 |
| 1753 | | Dr.P.சுப்பிரமணி | 1000 |
| 1754 | | N.சின்னையன் | 1000 |
| 1755 | | V.M.சிவகுமார் | 2000 |
| 1756 | | P.ரூபா | 1000 |
| 1757 | 1905 | C.செந்தில் வேலவன் | 1000 |
| 1758 | 191 | S.செந்தில்குமார் | 1000 |
| 1759 | 2773 | K.C.கந்தசாமி | 1000 |
| 1760 | 1710 | K.R.அண்ணாமலை | 1000 |
| 1761 | 146 | P.தங்கவேலு | 1000 |
| 1762 | 1302 | R.பாலசுந்தரம் | 1000 |
| 1763 | 1303 | P.தங்கவேலு | 1000 |
| 1764 | | S.தேவிபிரியா | 1000 |
| 1765 | | M.பூர்ணிமா | 1000 |
| 1766 | | L.தாரணி பிரியா | 1000 |
| 1767 | 2763 | N.கருப்புசாமி | 1000 |
| 1768 | | M.நதியா | 1000 |
| 1769 | 1682 | T.P.சண்முகம் | 1000 |
| 1770 | | P.சரவணன் | 1000 |
| 1771 | | R.சசிகலா | 1000 |
| 1772 | 2663 | K.அய்யாசாமி | 1000 |
| 1773 | 2932 | N.R.சதாசிவம் | 1000 |
| 1774 | 3469 | K.S.மணிவேல் | 1000 |
| 1775 | 546 | K.V.காளியப்பன் | 1000 |
| 1776 | | V.வெங்கடேஸ்வரன் | 1000 |
| | | மொத்தம் | 73,30,537 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதிய கம்ப்யூட்டர் அடையாள அட்டை வழங்க முடிவு செய்து, செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதுவரை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் உடனே அனுப்பி, புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி www.kongunanbargalsangam.com என மாற்றப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தில் சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறோம். ‘கொங்கு நண்பர்கள் இதழ்’ இந்த இணையதளத்தில் முழுமையாக வெளியிடப்படுகிறது. உலக முழுவதிலும் உள்ள கொங்குச் சொந்தங்கள் இதைப் படித்துப் பயன்பெறலாம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**கே.கே.ரமேஷ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :
Name / பெயர் :
Father's Name / தகப்பனார் பெயர் :
Date of Birth / பிறந்த தேதி :
Edu. Qualification / கல்வித்தகுதி :
Occupation / தொழில் :
Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# 02-09-2012 அன்று நடைபெற்ற சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொன்விழாவிற்கு சான்றோர்களின் வாழ்த்துகள்

**திரு.பரணி பாலு அவர்களுக்கு**

நான் 1980 வருஷத்தில் இருந்து கொங்கு நண்பர்கள் சங்கம் பொள்ளாச்சி தலைமகன் ராமசாமி கவுண்டர் தலைமையில் கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு பல கஷ்டங்கள் மத்தியில் பணியாற்றி உள்ளேன். 1990 வருஷம் கோவை செழியன் கொங்கு வேளாளக் கவுண்டர் சங்கத்தை துவக்கினார் 1992 வருஷம் கோவை மாவட்டத்தில் 125, திண்டுக்கல் மாவட்டம் 150 ஊர்களில் கிளைகள் ஆரம்பித்து கோவை செழியன், சி.எம்.குப்புசாமி, மோகன் கந்தசாமி தலைமையில் பல பொதுக் கூட்டங்கள் நடத்தினோம். SCST, PCR வன்கொடுமை சட்டத்தை எதிர்த்து திருப்பூர், கோவை, உடுமலை, பழனி ரோடு, திண்டுக்கல் ஆகிய ஊர்களில் போராட்டங்கள் நடத்தி கைதானவர்களை விடுதலை செய்ய பல மறியல், கடை அடைப்புப் போராட்டம் நடத்தினோம். கொங்கு மண்டலத்திற்கும், நமது சமுதாய மக்களுக்கும் பல நன்மைகளைச் செய்து கொண்டு வருகிறோம். தீரன் சின்னமலை மாளிகைக்கு ரூபாய் 1000 செக் அனுப்பி உள்ளேன். மேலும் பல மக்களிடம் நன்கொடை வாங்கி அனுப்புகிறேன். நன்றி.

இங்ஙனம்
**வி.நாச்சிமுத்துக்கவுண்டர்**
மாநிலத் துணைத்தலைவர்
கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை

**திரு.பரணி பாலு அவர்களுக்கு**

தங்கள் தலைமையில் கொங்கு நண்பர்கள் சங்க பொன்விழா சிறப்பாக நடந்ததென அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். இதே உத்வேகத்துடன் வைர விழாவிற்கு ஏற்பாடு செய்து அதை உலகக் கொங்கு சமுதாயத் திருவிழாவாகக் கொண்டாட வேண்டுகிறேன். அதற்கான வாழ்த்துகள்.

எனக்கு கொங்கு மக்கள் அளித்த விருதினை பெருமையுடன் பெற்றுக்கொண்டேன். அதற்கான தங்கள் முயற்சிக்கும் ஆர்வத்திற்கும் என் நன்றி.

50 ஆண்டு கால சங்க வரலாற்று நூலும், பொன்விழா ஆண்டு மலரும் மிகச்சிறப்பாகவுள்ளன. அத்தியாயங்கள் நன்கு பிரிக்கப்பட்டு அருமையாக வெளிவந்துள்ளன. தங்களுக்கும், நிர்வாகக்குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றி.

இங்ஙனம்
**டாக்டர் கே.கே.இலட்சுமணன்**
முன்னாள் செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**திரு.பரணி பாலு அவர்களுக்கு**

02–09–2012 அன்று கொங்கு நண்பர்கள் சங்கப் பொன்விழாவுக்கு அழைத்துப் போற்றியமைக்கு மிக்க நன்றி. மிகவும் சிறப்பாக விழாவை நடத்திய தங்களுக்கும், தங்கள் குழுவுக்கும் பாராட்டுகள். இணையதளத்தில் செய்திகளை அறிவிப்பதற்கு செய்த ஏற்பாட்டுக்கும், E-mail லில் தகவல்களை அனுப்ப ஏதுவாக ஏற்பாடு செய்ததும் பாராட்டுக்குரியவை.

சுமார் 50 ஆண்டுகளுக்குமேல் சென்னைவாசியாக இருந்த நான் சில காரணங்களால் தற்போது ஈரோட்டில் இருந்து கொண்டு ஒரு கால் சென்னையிலும், ஒரு கால் ஈரோட்டிலுமாக இருந்துவருகிறேன். 77 வயதைத்தாண்டிவிட்ட எனக்கு அடிக்கடி சென்னை வர இயலவில்லைதான் என்றாலும், தங்களது அன்புக் கட்டளைக்குப் பணிந்துதான் 2/9/2012 ல் இதற்காகவே சென்னை வந்தேன். சுமார் 25 ஆண்டுகளுக்குமுன் தகவல் தொழில் நுட்பம் பெருகாத நிலையாலும், நமது சங்கத்தின் வரவு அதிகம் இல்லாத நிலையாலும் சில சமயம் போஸ்டு கார்டுகளில் தகவல் அனுப்புவதே சிரமமாக இருந்த காலத்தை மாற்றி, தற்போது மிக அற்புதமாக நடத்திக் கொண்டிருக்கும் தங்களுக்குப் பாராட்டுகள்.

இங்ஙனம்

**டாக்டர் எம்.ஏ.வேலுசாமி**
முன்னாள் தலைவர்
கொங்கு நண்பர்கள் சங்கம் சென்னை


## கொங்கு தமிழ் மணமாலை

(சேவை மையம்) 9442374373, 9944814370

கொங்கு வேளாளக் கவுண்டர் இனத்தில் உயர்கல்வி பயின்று உள்நாட்டில், வெளிநாட்டில் பணியில் உள்ளோர், சுய தொழில் செய்வோர், தொழிலதிபர் வீட்டு வரன்களுக்கு

**K.P.செந்தில்வேல்** M.A., M.Phil.,
ஜோதிடவியல்
575, திருநீலகண்டர் பெயிண்ட் கடை, முதல் மாடி, ரூம் எண்.10
ஐ.சி.ஐ.சி.ஐ அருகில், பல்லடம் ரோடு, திருப்பூர் – 641604
E-mail : kongutamilmanamalai@gmail.com


❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கப் பொதுக்குழு கூட்டம்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொதுக்குழுக்கூட்டம் 25-11-2012 அன்று வெள்ளிவிழா இல்லத்தில் சங்கத்தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. சென்னையிலிருந்தும், வெளியூர்களில் இருந்தும் வந்திருந்த உறுப்பினர்களை சங்க நிர்வாகிகள் வரவேற்றனர். இந்தப் பொதுக்குழுவில் 175 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

சங்கச் செயலாளர் திரு.ஆர்.செல்வராஜ் வரவேற்புரை நிகழ்த்தி, சங்கச் செயல்பாடுகள் பற்றி சுருக்கமாகப் பேசியதோடு, கீழ்க்கண்ட தீர்மானங்களை பொதுக்குழு உறுப்பினர்களின் ஒப்புதலுக்கு முன்மொழிந்தார்.

1. 26-02-2012 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அங்கீகரித்தல்.
2. 01-4-2011 முதல் 31-3-2012 வரையிலான ஆண்டறிக்கையை அங்கீகரித்தல்
3. 1-4-2011 முதல் 31-3-2012 வரையிலான ஓராண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட சங்கக் கணக்கு வழக்குகளை அங்கீகரித்தல்
4. தணிக்கையாளர் திரு. ஆர்.பாலசந்திரன் அவர்களை மீண்டும் சங்கத் தணிக்கையாளராக நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்தல்
5. நியமன செயற்குழு உறுப்பினர்களும் நிர்வாகக் குழுவிற்குப் போட்டியிட ஒப்புதல் அளித்தல்

மேற்கண்ட தீர்மானங்கள் உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு நிறைவேற்றப்பட்டன. இதற்கு நன்றி தெரிவித்துப் பேசிய சங்கத்தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி, கருத்தும், ஆலோசனையும் கூற விரும்பும் உறுப்பினர்களை ஒவ்வொருவராக பேச அழைத்தார். பொதுக்குழுவில் உறுப்பினர்கள் கூறிய கருத்துகள் பின்வருமாறு :

**திரு. மோகன்குமார் (உ.எண். 3036) சோமனூர்**

இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு பாதுகாப்புடன் சென்னையில் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுத்த சங்க நிர்வாகிகளுக்கு மிக்க நன்றி, சங்கத்திற்காகப் பாடுபடுவதோடு, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் உள்ள திரு.பி.சென்னியப்பன் அவர்களுக்கு நன்றி. நிதி வசூலிக்க உதவத் தயாராக உள்ளோம். சங்கத்தில் தங்குபவர்களுக்கு இன்னும் அதிக வசதிகள் செய்து தரவேண்டும்.

**பெரியசாமி (உ.எண். 226) கரூர்**

சங்கத்தின் அருமையான மூன்று கட்டடங்களில் தங்கிப் பயன்பெற்றவர்கள், சங்கத்திற்குத் திரும்பவும் உதவி செய்ய ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**தங்கவேல் (உ.எண். 1526) சேலம்**

50 ஆண்டு நிறைவு பொன்விழாவை மிகச் சிறப்பாக நடத்தியதற்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கிறேன். கடந்த 4 ஆண்டுகளில் சங்கத்தின் செயல்பாடுகள் சீரிய முறையில் இருந்தன. IAS அகாடமி தொடங்க எடுத்த முயற்சிகள் மிகவும் பாராட்டுக்குரியன. தாய்வீடு போன்ற சென்னை சங்கம் அரசியலுக்கு அப்பாற்பட்டு கொங்கு சமுதாயத்திற்குப் பல உதவிகளைச் செய்கிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்குகிறது. ஆண்டு விழாவிலும், பின்னரும் நடந்த சிற்சில நிகழ்ச்சிகள்

வருத்தமளிப்பதாக உள்ளன. புதிய நிர்வாகக் குழு இதைச் சீர்செய்ய வேண்டும். ஒற்றுமையைச் சீர்குலைக்கும் உறுப்பினர்களை ஒதுக்கி வைக்க வேண்டும்.

**நல்லகோவிந்தசாமி, முன்னாள் தலைவர்**

சங்க சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சங்க நிர்வாகிகள் நல்லமுறையில் சங்க வளர்ச்சிக்குப் பாடுபட்டுவருகிறார்கள். சிறு குறைகள் இருப்பின் பேசித் தீர்க்கலாம். நான் காவல்துறைப் பணியில் இருந்தபோது சமுதாய நண்பர்களுக்கு முடிந்த அளவு உதவி புரிந்தேன். கொங்கு இனத்திற்கு எதிராக வன்கொடுமை சட்டம் (PCR) தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. நான் நாமக்கல் மாவட்டத்தில் SP ஆகப் பணியாற்றியபோது ஏராளமான புகார்கள் வந்தபோதுகூட PCR சட்டத்தின்படி ஒரு வழக்கு கூட பதிவு செய்ய நான் விடவில்லை.

**ஆர்.பூபதி, இராசிபுரம் (உ.எண்.1785)**

உறுப்பினர்கள் சங்கத்திற்கு நல்லது செய்யவில்லை என்றாலும் அல்லது செய்யக்கூடாது. கருத்து வேறுபாடு இருக்கலாம்; தனி மனிதர் மோதல் இருக்கக்கூடாது. மூன்று கட்டடங்கள் கட்டி சாதனை புரிந்துள்ள சங்கம், ஆறு கட்டடங்கள் கட்ட முடியும்.

**எஸ்.ஆர்.இராஜேந்திரன், (உ.எண்.116) இணைச்செயலாளர்**

சில விஷயங்களை பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்காமல், பெருந்தன்மையுடன் கையாள வேண்டும். பிரச்சினைகளை விட்டுக்கொடுத்து தீர்க்கவேண்டும். குறைகளைக் சொல்லும்போது சரியான அணுகுமுறை இருக்க வேண்டும். பக்குவமாகச் சொல்லும் வழிமுறை வேண்டும். குறைகளையும், அதற்கான தீர்வுகளையும் தயங்காமல் சொல்லவேண்டும்.

**சூரியமூர்த்தி (உ.எண். 221)**

சங்கத்தை வளர்த்த அனைவருக்கும் மிக்க நன்றி. கல்வி, வேலைவாய்ப்பு, தொழிலில் சமுதாய மக்கள் முன்னேற சங்க நிர்வாகிகள் அரசிடம் பிரச்சினைகளை எடுத்துச் செல்லவேண்டும். PCR சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தொழிலதிபர்கள், மருத்துவமனை தலைவர்கள், கொங்கு தாளாளர்களிடம் பணம் பறிக்க சிலர் தவறான வழியில் செயல்படுகின்றனர். இதைக் கவனிக்க வேண்டும். இளைஞர்களுக்கு IAS பயிற்சி அளிக்கவேண்டும்.

**ஜெகநாதன் (உ.எண். 294)**

சங்கம் சிறப்பாக் செயல்படுகிறது. தீரன் சின்னமலை மாளிகைக்கு ஈரோடு நகரில் பெருமளவில் உள்ள உறுப்பினர்கள் சார்பில் ஒரு ஜெனரேட்டர் நன்கொடையாகத் தரப்படும் என உறுதி கூறுகிறேன்.

**விசா.சண்முகம் (உ.எண். 669)**

கரூர் மாவட்டத்தில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு அதிக உறுப்பினர்கள் உள்ளனர். தேர்தலில் என்னைப் போட்டியிட சிலர் வலியுறுத்தினார்கள். பழைய நிர்வாகக் குழு சிறப்பாகவும், அருமையாகவும் செயல்படுகிறது. எனவே அதுவே தொடரவேண்டும். எனவே போட்டியிடத் தேவையில்லை என்பது என் கருத்து

**கே.ஆர்.அப்பாவு, முன்னாள் தலைவர்**

50 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டுவரும் சங்கத்திற்கு நான் பெரிதும் உதவியுள்ளேன். சங்கம் நல்லமுறையில் செயல்படுகிறது. சிலர் இதைத் தடுக்க நினைக்கிறார்கள். பொதுக்குழு கூடாமல் இருக்க சிலர் முயற்சித்தனர். பலரின் கடுமையான உழைப்பால், ஆதரவால் சங்கத்தின் பொருளாதார நிலை நன்றாக உள்ளது. சங்கச் சொத்துக்குப் பாதுகாப்பு வேண்டும். யாரும் சங்க நிதியைத் தவறாகப்

பயன்படுத்துவதைத் தடுக்கவும், சொத்தை அபரிகரிக்கும் முயற்சியை ஒடுக்கவும், இது மிகவும் அவசியம். தலைவர், செயலாளர் ஆகிய இருவரையும் கொண்ட ஐவர் குழு இதற்காக அமைக்க வேண்டும். வரப்போகும் செயற்குழு இதை உடனே செய்யவேண்டும்.

**நந்தகுமார் (உ.எண். 1953)**

சங்கம் மிகச்சிறப்பாகச் செயல்படுகிறது. நிர்வாகிகள் பாராட்டுக்குரியவர்கள். விவசாயிகளின் நலனுக்கு சங்கம் ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**செங்கோட்டுவேல்**

சங்க உறுப்பினர்களுக்குள் ஒற்றுமை வேண்டும். சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. குறைகளை, பிரச்சனைகளை நமக்குள் ஜனநாயக முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். சொத்துப் பாதுகாப்புக்குழு நிர்வாகக் குழுவிற்கு இடைஞ்சல் தருவதாக இருக்கக்கூடாது. ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

**ஈ.ஆர்.ஈஸ்வரன், முன்னாள் செயலாளர்**

கிராமங்களில் நம் இனப்பெண்களைப் பாதுகாப்பது பெரும்பாடாக உள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 90% வெளியில் சொல்வதில்லை. துயரம், அவமானம், தற்கொலை- இவையெல்லாம் பெற்றோர் தம் பெண்களால் படும் இன்னல்கள். இதைத் தடுக்க முயன்றால் PCR சட்டம் பாய்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக வன்கொடுமை சட்டத்தின் கீழ் போடப்பட்ட 400 பொய் வழக்குகளை இலவசமாக உயர்நீதிமன்றம் வரை சென்று எதிர்கொண்டுள்ளோம். நமக்காக, இலவசமாக உயர்நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்கறிஞர் வேறுயாருமல்ல; நம்முடைய சிறப்புமிக்க செயற்குழு உறுப்பினர் திரு.வி.பி.செங்கோட்டுவேல்தான்.

கடந்த மூன்று மாதமாக கலப்புத் திருமணம், வன்கொடுமை சட்டம் பற்றி அதிக அளவில் விவாதம் நடைபெற்று வருகிறது. டெல்லி உயர்நீதிமன்றத்தில் 10 பேராவது இருக்கும் கூட்டத்தில் ஜாதிபேர் சொல்லித் திட்டினார் என்று புகார் கொடுத்தால்தான் FIR போட வேண்டும் எனத் தீர்ப்பு கொடுத்துள்ளனர். மாநில அரசும் Non-Bailable offence என்பதை 'Bailable Offence' என மாற்ற ஆலோசனை செய்து வருகிறது.

சங்கம் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் செயற்குழு பல சாதனைகளைப் புரிந்துள்ளது. சங்கச் கடனை அடைத்தனர். சொந்தப் பணத்தை வட்டியில்லாமல் கொடுத்து நிர்வாகிகள் கொங்கு நாடு அறக்கட்டளை கடனை அடைத்தனர். சிறப்பான கட்டடம் கட்டினார்கள். குறையைச் சொல்லுங்கள், உரிமை இருக்கிறது. ஆனால் விளையாட்டுத்தனமாக செய்து, சங்கத்தை ஊனப்படுத்தக்கூடாது சமுதாயத்தின்மேல் நடக்கும் தாக்குதலுக்குப் பாதுகாப்பு கொடுக்க சங்கம் முன்வரவேண்டும். சமுதாயத்திற்கு அங்கீகாரம் வாங்கத்தான் கட்சி உள்ளது. ஆனால் சங்கம் கட்சி சார்பற்றது. சங்கத்திற்கு சொத்துப் பாதுகாப்புக்குழு அவசியம்தான்.

**கே.எம்.சுப்பிரமணியம்**

பெருமைக்குரிய மூன்று பெரிய கட்டங்கள், 50 ஆண்டுகளாக சேர்த்த சொத்து, இதைப் பாதுகாக்க வேண்டும். மேலும், சொத்து சேர்க்க வேண்டும். பொன்விழா கண்ட தலைவர் பரணி கே.பாலசுப்பிரமணி அரும்பாடுபட்டு, அயராது உழைத்து சங்கத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

**அருண் (உ.எண். 3311)**

சங்கம் நன்கு சிறப்புடன் செயல்படுகிறது. 100 அறைகள் கொண்ட கட்டடம் புதியதாகக் கட்ட வேண்டும். சங்கத்தின் சார்பில் பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டும்.

**கே.செல்லப்பன் (எ.எண். 432)**

திரு.ஈஸ்வரன்தான் நான் சங்கத்தில் சேர்வதற்குக் காரணம். கிராமத்தில் யாராவது தவறு செய்தால் ஊர்மக்கள் அவரை ஒதுக்கி வைக்கிறார்கள். வழக்கு தொடுத்து சங்கத்திற்கு இடையூறு செய்தவர்களை சங்கத்திலிருந்து நீக்க வேண்டும். இனிமேல் கோர்ட்டுக்குச் செல்பவர்களையும் நீக்க வேண்டும். சிறப்பாகச் செயல்படும் நிர்வாகிகளைப் பாராட்டவேண்டும்.

**சிவகுமார்**

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

இந்த இரண்டு குறள்கள் கூறும் நெறி நின்று சங்கம் செயல்பட வேண்டும்.

**பி.கே.வெங்கடாசலம், நாமக்கல்**

சங்கத்தின் செயல்பாடுகளைத் தடுக்கும் இரண்டு நபர்களை அனைவருக்கும் அடையாளம் காட்டவே நான் இங்கு வந்துள்ளேன். வழக்குகள் போட்டு சங்கத்தை முடக்குவதுதான் இவர்கள் நோக்கம். நாமக்கல் வேளாளர் சங்கத்திற்கு ரூ. 100 கோடி மதிப்புள்ள 55 ஏக்கர் நிலம் உள்ளது. இதை அபகரிக்கும் நோக்கத்துடன் இதே நபர்கள் அங்கு 8 வழக்குகள் போட்டுள்ளனர். இவர்களுக்கு வேறு வேலை இல்லை. உறுதியும், நேர்மையும், வெற்றிபெறும். மறப்போம், மன்னிப்போம் என்ற வாக்குப்படி அவர்களை உதாசீனப்படுத்தவேண்டும். முக்கியத்துவம் தரக்கூடாது. நாமக்கல் நிலத்தில் மருத்துவக் கல்லூரி கட்ட சங்கம் முன் வந்தால் ஆதரவளிப்போம்.

**பரணி கே.பாலசுப்பிரமணி, தலைவர்**

இன்று முகூர்த்த நாள். இருந்தும், வெளியூர்களிலிருந்து சங்கத்தின் மேல்கொண்ட பாசத்தால் இங்கு வந்துள்ள உறுப்பினர்கள் அனைவரையும் வணங்கி வரவேற்கிறேன். சங்கத்திற்காக 12 ஆண்டுகள் உழைத்தேன். இந்த வெள்ளிவிழா கட்டிடம் கட்டிமுடிக்க பல சிரமங்கள் பட்டேன். கான்கிரீட் போடும்போது எதிரில் குடியிருந்தவர்களின் கடுமையான எதிர்ப்பு. சிலர் என்னைத் திட்டி, சாபமிட்டனர். சிரமப்பட்டு கான்கீரிட் போட்டு முடித்தோம். சங்கத்தைக் கெடுப்பதற்கு சிலர் கிளம்பியுள்ளனர். அவர்களை சென்னையிலிருந்து சிலர் இயக்கிக் கொண்டுள்ளனர். நேற்று மாலை 7 மணி வரை இந்தப் பொதுக்குழு இன்று நடக்குமா? நடக்காதா? என்பது தெரியாது. உறுப்பினர்கள் சொல்வதைத் கேட்டு தலைமை செயல்படுகிறது.

சங்கத்திற்காக உழைப்பவர்களைப் பாராட்ட வேண்டும். ELITE Enterprises ரூ. 15 லட்சம் கடன் கொடுத்தார்கள். அதற்கு நான் ஜாமீன் போட்டேன். வங்கிக்கடன் கிடைக்கவில்லை. சக்தி மசாலா திரு. துரைசாமி ரூ. 10 இலட்சம் வட்டியில்லாக் கடனாகக் கொடுத்தார். குடும்ப விழாவில் ரூபாய் 30 இலட்சம் வசூல் செய்தோம். விழாவிற்கு ரூ. 15 லட்சம்தான் செலவு செய்தோம். மீதியை சங்க நிதியில் சேர்த்தோம். இந்த நேரத்தில் அமரர் கே.ஆர்.பி.மோகனின் தன்னலமற்ற, சிறப்பான சேவையை நினைவு கூர்வது என் கடமை அவருடைய அண்ணன் டாக்டர் கே.ஆர்.பி.சண்முகம் அவர்கள் ரூ. 4 இலட்சம் சங்கத்திற்கு கட்டிட நிதி கொடுத்திருக்கிறார். அவரை நாம் பாராட்ட வேண்டும்.

சங்கம் காப்பாற்றப்பட வேண்டும். தொழிலை விட்டுவிட்டு, குடும்ப வேலையை விட்டுவிட்டு, சொந்தக் காசைச் செலவு செய்து சங்கத்திற்காக உழைப்பவர்களைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. தவறாகப் பேசாதீர்கள். சென்னையில் இரண்டு நிமிடம் தொலைபேசியில் பேசுவதற்கு கூட நேரமில்லை என்று சொல்பவர்களைப் பார்க்கிறோம்.

இவ்வாறு இருக்கும்போது சங்கத்திற்காக நேரம் காலம் பார்க்கலாம், சொந்தப் பணத்தையே சங்கவேலை பார்க்கவும் செலவு செய்து வருகிறோம். உடலை வருத்திக்கொண்டு, அயராது உழைக்கிறோம். IAS அகாடமி போன்ற அற்புதமான திட்டத்தைப் பற்றிக் கூட சிலர் குறை சொல்வதைக் கேட்கும்போது,சங்கத் தலைவர் பதவிக்கு நிற்க வேண்டுமா என்றுகூட நினைத்ததுண்டு. மனதைப் புண்படுத்தாதீர்கள். குறைகளை கடிதம் மூலமோ, தொலைபேசி மூலமோ கூறலாம். அவற்றை நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். சங்கம் திறந்த புத்தகம், திறந்த கணக்கு வழக்குகள். பொன் விழா கண்ட இச்சங்கத்தை வளர்க்க, சமுதாய சேவை இன்னும் சிறப்புடன் ஆற்ற ஜனநாயக முறைப்படி ஒற்றுமையுடன் செயல்படுவோம்.

கிண்டியில் உள்ள தீரன் சின்னமலை சிலை அமைந்துள்ள இடத்தின் பராமரிப்புப் பணியை ரூ. 10 இலட்சம் செலவில் செய்ய ஆணையிட்ட தமிழக அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுக்குழுவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக பொருளாளர் கே.கே.ரமேஷ் நன்றியுரை வழங்கினார். சங்கத்திற்காக பல வழக்குகளில் இலவசமாக வாதாடிவருகின்ற செயற்குழு உறுப்பினர் திரு.வி.பி.செங்கோட்டுவேல் அவர்களுக்கும், சங்கத்தின் கடனை அடைக்க வட்டியில்லாக் கடன் கொடுத்த கொங்குச் சொந்தங்களுக்கும், தீரன் சின்னமலை மாளிகைக்கு ஜெனரேட்டர் வாங்கித் தருவதற்கு முன்வந்த ஈரோடு ஜெகநாதன் அவர்களுக்கும், பொதுக்குழுவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்தார், பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ். உறுப்பினர்கள் அனைவருக்கும் சுவைமிக்க மதிய உணவு வழங்கப்பட்டது.

❖❖❖❖❖

## கல்லூரித் தாளாளர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் நன்றி நவிழும் விழா

**16–12–2012** ஞாயிற்றுக்கிழமை ஈரோடு திண்டல் நகரில் உள்ள வேளாளர் மகளிர் கல்லூரி கலையரங்கத்தில் மாலை **3.00** மணி அளவில் கலாச்சார பாதுகாப்பு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும். ‘கொங்கு இனக்குழந்தைகளின் கலாச்சார சீரழிவுக்குப் பெரிதும் காரணம் பெற்றோரா ? (குடும்பச்சூழல்) அல்லது சமூகமா ? (புறச் சூழல்) என்ற தலைப்பில் பட்டிமன்றம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இந்த விழாவில் கொங்கு மக்களின் கல்விப்பணிக்கு பேருதவி புரிந்துள்ள நன்கொடையாளர்களுக்கும் தாளாளர்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்து கௌரவிக்கப்பட உள்ளனர்.

விழாவில் சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பரணி கே.பாலசுப்பிரமணி
தலைவர்

# மதிப்புரை

நூல் : திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை
பதிப்பாசிரியர் : புலவர் செ.இராசு எம்.ஏ., பிஎச்.டி.,
நூல் கிடைக்குமிடம் : கொங்கு ஆய்வு மையம், ஈரோடு
0424-2262664, 9965550212
விலை : ரூ. 200, பக்கம் 368, பதிப்பு ஆண்டு 2012

1998 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகச் சிறப்பாக பணியாற்றியவரும், ஈரோடு கொங்கு ஆய்வு மையம் அமைப்பாளரும், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகக் கல்வெட்டு-தொல்லியல் துறை முன்னாள் தலைவரும், கொங்குச் சமுதாயம் பற்றி 70க்கும் மேற்பட்ட அரிய ஆய்வு நூல்களை எழுதியவரும், இவ்வாண்டு (2012) தமிழக அரசின் உ.வே.சா. விருது பெற்றவருமான கொங்கு மாமணி புலவர் செ.இராசு அவர்கள் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்ற சமய வரலாற்று நூலை அருமையாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் பல கோவில்களுக்கு திருப்பணி மாலைகள் பிறந்தன. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் (12-12-1912) கொங்கு நாட்டின் மிகச்சிறந்த திருப்பணிமாலையாம் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையை அட்டாவதானம் முத்துசாமி கோனார் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். பல்லாண்டுகளாய்க் கொங்குநாட்டின் வரலாற்று ஆவணங்களில் முக்கியமான திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையை ஆராய்ந்து, பனையோலைகளில் புதிதாய்க்கிடைத்த பாடல்களையும் சேர்த்து சரியாக நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் புலவர் இராசு அவர்கள் அழகுற அச்சியற்றியுள்ளார்.

தமிழக, கொங்கு மண்டல வரலாற்றுக்குப் பெரும் கொடையாகப் பற்பல சான்றுகள் இந்நூலில் உள்ளன. இந்நூலில் கூறப்பட்டுள்ள பல செய்திகள் நாட்டு வரலாறு, உள்ளூர் வரலாறு, சமுதாய வரலாறு போன்ற ஆய்வுகளுக்குப் பெரிதும் துணை புரிவதாக உள்ளன. சிறப்புமிகு வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்ற இந்நூல் வரலாறு, சமூக, சமய ஆர்வமுடைய பெருமக்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கொங்கு வரலாற்று கலைக்களஞ்சியமாகத் திகழும் புலவர் இராசு அவர்கள் பெருமுயற்சியெடுத்து பதிப்பித்துள்ள இந்நூல் எதிர்வரும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும், முற்காலத் திருப்பணிகளை எடுத்துச்செல்லும் என்கிறார், அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர் திரு.டி.எம்.காளியண்ணன் அவர்கள்


வரலாற்றுப்பணியில் பல சாதனைகள் புரிந்துள்ள புலவர் இராசு அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் உள்ள மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகவும், சைவ இலக்கியக் களஞ்சியத்தில் ஒரு சிறந்த பொக்கிஷமாகவும் இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அனைவரின் இல்லங்களையும் அலங்கரிக்கும் வகையிலும், படித்துப்பயன்பெறும் வகையிலும் உள்ள இந்த அரிய நூலின் பதிப்பாசிரியர் புலவர் செ.இராசு அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர். போற்றுதலுக்குரியவர்.

– முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## ஆர்.இராமச்சந்திரன்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகில் வெங்கடத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவரும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினரும், கிருஷ்ணகிரி மாவட்ட கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவருமான திரு.பி.இராமசாமி – திருமதி கமலம் ஆகியோரின் மகனாக 1986 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. ஆர். இராமச்சந்திரன்

பள்ளிப் படிப்பை ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் உயர்நிலைப்பள்ளியிலும், பி.எஸ்ஸி பட்டப்படிப்பை சென்னை லயோலா கல்லூரியிலும், பி.எல்.பட்டப்படிப்பை சென்னை அம்பேத்கர் சட்டக்கல்லூரியிலும் படித்தார். பி.எஸ்ஸி தேர்வில் மாநில அளவில் முதல் மாணவராகத் தேர்வு பெற்று தங்கப்பதக்கம் பெற்றார் என்பதும், பி.எல் நுழைவுத்தேர்வில் மாநிலத்தில் முதல் இடம் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

IAS அலுவலராகத் தேர்வு பெற்று, நாட்டுக்குச் சேவையாற்றிட வேண்டும் என்ற உன்னத லட்சியத்துடன் IAS தேர்வுக்காக கடினமாக உழைத்தார். நான்கு முறை வெற்றி கிடைக்கவில்லை. ஆனாலும் தொடர்ந்து மீண்டும் தேர்வு எழுதினார். 04–05–2012 அன்று வெளியான ஐ.ஏ.எஸ்.தேர்வு முடிவுகளின்படி தமிழக அளவில் ஐந்தாவது இடத்தையும், அகில இந்திய அளவில் 115 வது இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளார், திரு.ஆர்.இராமச்சந்திரன்


ஐந்தாவது முறையாக இந்திய குடிமைப்பணித் தேர்வு எழுதியபோதுதான் இவர் இந்தச் சாதனையை செய்து முடித்துள்ளார். முயன்றால் முடியாதது எதுவுமில்லை, முயற்சிதன் மெய்வருத்தக்கூலி தரும், முயற்சி திருவினையாக்கும் ஆகிய பழமொழிகளை மெய்ப்பிப்பதுபோல் இவருடைய வெற்றி அமைந்துள்ளது. தன்னம்பிக்கை, விடா முயற்சி, அயரா உழைப்பு, திறமை ஆகியவற்றால் IAS தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். IAS தேர்வு எழுதும் இளைஞர்களுக்கு இவர் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறார் என்றால் அது மிகையல்ல.

கிராமத்தில் உள்ள மாணவ மாணவியருக்கு IAS போன்ற கல்வி பயில வழிகாட்டுதல், மனித நேயத்துடன் மக்களுக்கு சேவை செய்தல், உயர்கல்விக்காக அமெரிக்கா சென்று Harward University ல் MBA படித்து உயர்ந்த பதவியில் அமர்ந்து இந்திய நாட்டுக்கு சேவை செய்தல், பெற்றோரைப் பேணிக்காத்தல் ஆகியவற்றை விருப்பமாகத் தெரிவித்துள்ளார், திரு. இராமச்சந்திரன். தேர்வு முடிவுகள் வெளிவந்த பின்னர், தன் தந்தை திரு. பி.இராமசாமி அவர்களுடன் வெள்ளிவிழா இல்லத்திற்கு ஜீலை மாதம் வருகை புரிந்த திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் வாழ்த்து தெரிவித்தனர்.செய்திமடலிலும் இவருக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

இவருடைய வெற்றிக்கு மாவட்ட துணை ஆட்சியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தந்தை திரு. பி.இராமசாமி அவர்களும், தாயார் திருமதி கமலம் அவர்களும் அளித்த ஊக்கமும், உற்சாகமும் ஒரு காரணமாகும். IAS தேர்வில் இந்திய அளவில் 115 ஆம் இடமும், தமிழக அளவில் 5 ஆம் இடமும் பெற்று சாதனை படைத்துள்ள திரு. ஆர்.இராமச்சந்திரன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02-09-2012 அன்று நடந்த பொன்விழாவில் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி வாழ்த்தியது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. கிருபா புஷ்பராஜ்

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் பேரன் திரு. கிருபா புஷ்பராஜ். தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியைச் சேர்ந்தவரும், நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவருமாகிய பொறியாளர் திரு. நா.புஷ்பராஜ் – சங்கத்தில் 14 ஆண்டுகளாக செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றி வருபவரும், சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள "சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் – 50 ஆண்டு வரலாறு (1961–2011)" என்ற நூல் உட்பட பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளவருமான முனைவர் மணிமேகலை ஆகியோரின் புதல்வர் இவர்.

32 வயது நிரம்பிய இவர் கோவை P.S.G. தொழில்நுட்பக்கல்லூரியில் B.E., (ECE) பட்டம் பெற்றார். ECE பிரிவில் கல்லூரியில் முதல்இடம் பெற்றுச் சாதனை படைத்தார். பெங்களூரில் உள்ள Siemens நிறுவனத்தில் ஓராண்டு சிறப்பாகப் பணியாற்றிய பின்னர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து M.S பட்டம் பெற்றார். கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட இவருடைய கட்டுரைகள் பலரது பாராட்டையும் பரிசுகளையும் பெற்றன.

M.S.பட்டம் பெற்ற பின்னர், INTEL நிறுவனத்தில் சேக்ரோமென்ட்டோ நகரில் பணியில் சேர்ந்தார். 2009 ஆம் ஆண்டு வரை அங்குப் பணியாற்றியபோது பல விருதுகள் வாங்கியுள்ளார். பன்னாட்டு இதழ் ஒன்றில் இவருடைய கட்டுரையைப் படித்த INTEL நிறுவனத்தின் துணைத்தலைவர் ஒரு விழாவை ஏற்பாடு செய்து இவரைப் பாராட்டியதோடு, மேற்கொண்டு சட்டப்படிப்பு படித்து காப்புரிமைப் பிரிவில் நிபுணத்துவம் பெறுமாறு ஆலோசனை கூறினார். மேலும் இந்நிறுவனம் இவருடைய சட்டபடிப்புச் செலவை ஏற்றுக்கொண்டது.

Intel நிறுவனத்தில் முழுநேரம் பணிபுரிந்து கொண்டு, அதே நேரத்தில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள மெக் ஜார்ஜ் சட்டப்பள்ளியில் சேர்ந்து பகுதி நேரப் படிப்பாக நான்கு

ஆண்டுகள் படித்தார். 120 பேர் கொண்ட வகுப்பில் இவர் ஒருவர் மட்டும் இந்தியர். கல்லூரியில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று J.D. (Judicial Doctorate) பட்டம் பெற்றார்.

பின்னர், கல்போர்னியா மாகாணத்தில் உள்ள புகழ் பெற்ற Perkinscoie என்ற சட்ட நிறுவனத்தில் Patent Attorney ஆக சேர்ந்து பணியாற்றினார். அமெரிக்க நாட்டின் தற்போதைய அதிபரான பாரக் ஒபாமா அவர்கள் இந்த நிறுவனத்தில்தான் வழக்கறிஞராக சில காலம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. கிருபா தான் படித்த சட்டக்கல்லூரியிலேயே பகுதி நேரப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். சென்ற முறை சென்னைக்கு வந்தபோது கலைஞர் தொலைக்காட்சியில் 'சந்தித்த வேளையில்' நிகழ்ச்சியில் இவர் அளித்த பேட்டி பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர், மூத்த வழக்கறிஞர் இரா.காந்தி, தி.க.தலைவர் கே.வீரமணி மற்றும் வழக்கறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டது.

தமிழில் நல்ல புலமை பெற்றுள்ள இவர் விடுமுறை நாட்களில் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தருகிறார். அங்குள்ள தமிழ்ச் சங்கத்தோடு இணைந்து தமிழ்ப்பணியும் புரிந்து வருகிறார்.

வாதத்திறமை, பங்கு கொண்ட வழக்குகளின் முடிவுகள், காப்புரிமை சட்டம் பற்றி பன்னாட்டு இதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், வேலை செய்யும் நிறுவனம் மற்றும் வகிக்கும் பதவி, சட்டம் சம்பந்தமாக வகிக்கும் ஆசிரியர் போன்ற பிற பணிகள், மாகாணத் தகுதித் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் போன்றவைகளின் அடிப்படையில் Super Lawyer - Rising Star என்ற உயரிய விருது கலிபோர்னியா மாகாணத்தில் பணி புரியும் வழக்கறிஞர்களில் இரண்டு சதவீதம் பேர்களுக்கு மட்டும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இந்த விருதை 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து பெற்று சாதனை படைத்துள்ளார். இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்று பணியாற்றிய வழக்கறிஞர்களில் இந்த விருதைப் பெற்றவர்கள் மிகச்சிலரே என்பதும், தமிழகத்தில் இருந்து இந்த விருதைப் பெற்றவர் இவர் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது உலகப்புகழ்பெற்ற 'Amazon' நிறுவனத்தின் சட்டப்பிரிவில் Patent Counsel ஆகப் பொறுப்பேற்று சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார்.

Intellectual Property Rights, Copy Right, Patent Rights, காப்புரிமை சட்டம் போன்றவை உலக அளவில் தற்போது முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இந்தத் துறையில் சிறந்த நிபுணத்துவம் பெற்று, அமெரிக்க கலிபோர்னியா மாகாணத்தில் Super Lawyer - Rising Star விருதை இருமுறை பெற்று கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு.கிருபா புஷ்பராஜ் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02–09–2012 அன்று நடந்த பொன்விழாவில் 'கொங்கு சாதனையாளர்' விருது அளித்து பாராட்டி வாழ்த்தியது.


❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ

## மருந்தின்றி மலச்சிக்கலைப் போக்க

பத்மஸ்ரீ கொங்குமாமணி வி.எஸ்.நடராசன்
முதியோர் மருத்துவர்

மலச்சிக்கலுக்குக் காரணங்கள்



- நார்ச்சத்து மிகுதியாய் உள்ள உணவினைக் குறைவாய் உண்ணுதல்.
- குடலில் ஏற்படும் கட்டி, புற்றுநோய், அடைப்பு, நீண்ட காலக் குடலிறக்கம், மூலம், குதத்தில் ஏற்படும் வெடிப்பு முதலான நோய்கள், தைராய்டு என்னும் நாளமில்லாச் சுரப்பி குறைவாய்ச் சுரத்தல், உடலிற் சுண்ணாம்பு சத்து மிகுதல் (Hypercalcaemia), பொட்டாசியம் குறைதல் (Hypokalemia), மனச்சோர்வு (Depression)
- முதியோர் மிகுதியாய்த் தண்ணீர் குடிப்பதில்லை. அடிக்கடி சிறுநீர் கழித்தலைத் தவிர்க்கவே தண்ணீரைக் குறைவாய்க் குடிப்பர். இந்நிலையைப் பெண்களிடம் மிகுதியாய் காணலாம்.
- மாத்திரைகள் : இரும்புச்சத்து மாத்திரை, கோடின் கலந்த வலி நிவாரணி, அலுமினியம் சேர்ந்த வயிற்று வலி மாத்திரை, சிறுநீர் வெளியேறப் பயன்படுத்தும் மாத்திரை முதலானவற்றை உண்ணல். தூக்க மாத்திரையை மிகுதியாய் உட்கொள்ளுதல்
- போதிய உடற்பயிற்சியின்மை
- கழிவரை சரியாய் இல்லாமையாலும், இடுப்பு, முழங்கால் வலியாலும், முதியோர் அடிக்கடி மலம் கழிப்பதைத் தவிர்த்தல்

**மலச்சிக்கலின் தொல்லைகள்**

மலச்சிக்கலைக் கவனிக்காமல் விட்டால் பல தொல்லைகள் உண்டாகும். அத்தொல்லைகள் உடலுக்குக் கெடுதல் விளைவிப்பதோடு உயிருக்கும் சில சமயங்களில் ஊறுவிளைவிக்கும். ஓரிருநாள் மலச்சிக்கலினால் தொல்லைகள் ஏதும் விளைவதில்லை. பல மாதங்கள், பல ஆண்டுகள் தொடர்ந்து இருந்தால்தான் பல தொல்லைகள் விளைவும்.

- முதியவர் மலச்சிக்கலினால் அவதியுறும்போது நெஞ்சு வலியும், மயக்கமும் வரக்கூடும்.
- குடல் இறக்கம் (Hernia), கால்களிலுள்ள இரத்தக்குழாய்கள் சுருண்டு பெரியனவாகிவிடும் (Varioce Venis).
- மலம் சரிவரச் செல்லாமையால் மனத்தில் ஒருவிதச் சொல்ல முடியாத துன்பம், படபடப்பு உண்டாகும்.
- கட்டிப்போன மலத்தினால் குதத்தில் விரிசல் ஏற்பட்டு இரத்தக்கசிவு ஏற்படும்.
- மலச்சிக்கலால் சில நேரங்களில் திடீரென்று சிறுநீர் அடைப்பு ஏற்படுவதுண்டு.
- மலம் சிறுகுடலில் தேங்கி நிற்பதாலும் சிறுகுடல் அடைப்பு ஏற்படலாம்

. மலம் பெருங்குடலில் தேங்கி, முழுமையாய்ப் பெருங்குடலை அடைத்துவிடும். அவ்விடத்தில் தேங்கியுள்ள அசுத்த நீர் மட்டும் கசிந்து, கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறும். அது வயிற்றுப் போக்கு போலக் காணப்படும்

. மலமிளக்கி மாத்திரைகளைத் தொடர்ந்து உண்ணும் தீய பழக்கம் உண்டாகும்.

**சிகிச்சை முறை**

மலச்சிக்கலுக்கு ஏதேனும் நோய் காரணமாயிருந்தால் அந்நோய்க்குரிய சிகிச்சையை முதலில் செய்துகொள்ள வேண்டும். கீழ்க்காணும் முறைகளைக் கடைப்பிடித்தால் முதுமையில் மலச்சிக்கலைத் தவிர்க்க முடியும்.

. ஒரு நாளைக்கு 10 முதல் 15 தம்ளர் (2-3 லிட்டர்) தண்ணீர் குடிக்க வேண்டும் (இதய மற்றும் சிறுநீரக நோயாளிகள் டாக்டரின் அறிவுரைப்படி தண்ணீர் குடிக்க வேண்டும்)

. நாள்தோறும் சிறிது நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

. தேவையற்ற மாத்திரைகளை நிறுத்த வேண்டும்.

. முக்கியமாய் நார்ச்சத்து அதிகமுள்ள உணவுப் பொருள்களை மிகுதியாய் உண்ண வேண்டும். கேழ்வரகு, கோதுமை, தினை, வரகு, கொள்ளு முதலானவை நார்ச்சத்து மிகுதியாக உள்ள உணவுகளாகும்.

கீரை, வாழைத்தண்டு, முட்டைகோஸ், காலிபிவளர், புடலங்காய், பாகற்காய் முதலான காய்களிலும், பேரீச்சபழம், அத்திப்பழம், மாம்பழம் முதலிய பழங்களிலும் நார்ச்சத்து மிகுதியாயுள்ளது. வாழைப்பழம், மலச்சிக்கலுக்கு மிக நல்லது என்று எல்லோரும் எண்ணுகின்றனர். ஆனால் அதில் நார்ச்சத்து மிகவும் குறைவே (0.45%) அப்பழத்தில் மாவுச்சத்து மிகுதி. அதுவே மலத்தைப் பருக்க வைத்து இளக்கிவிடுகிறது. மிளகு, ஓமம், கொத்துமல்லி, மிளகாய் வற்றல் போன்ற பொருள்களிலும் நார்ச்சத்து மிகுதியாய் உள்ளது.

இம்முறைகளால் பலனில்லை என்றால் மலமிளக்கி மாத்திரைகளை இடைவிட்டோ, தொடர்ந்தோ முதியவர் உண்ணலாம். ஆனால் மருத்துவர் ஆலோசனை பெற்று இம்மாத்திரைகளை உண்ணுதல் நல்லது. நோயுற்ற முதியவர், மிக வயதான முதியவர் எனிமாவை மேற்கொண்டோ, மலமிளக்கி மாத்திரைகளை ஆசனவாயில் நுழைத்தோ மலச்சிக்கலிலிருந்து விடுபடலாம். ஆனால், முடிந்த அளவிற்கு இவற்றை ஒரு பழக்கமாக ஆக்கிக்கொள்ளாமலிருத்தல் நல்லது.

மலச்சிக்கலைப் போக்க முறையான, அளவான உணவே மருந்தாகும்.

**கேள்வி பதில்**

**திரு.எஸ்.சிவராமன், பவானி**

கேள்வி : என் வயது 71, இரவில் தூக்கத்தில் திடீரென்று என் கால்களில் (கெண்டைக்கால் பகுதியில்) தாங்க முடியாத வலி ஏற்படுகிறது. சில வினாடிகள்தான் இருக்கும். அச்சமயத்தில் நான் மிகவும் துடித்துப்போவேன். எழுந்து கால்களை சற்று அமுக்கி விட்டால் வலி மெதுவாகக் குறையும். இதற்கு என்ன காரணம்? வலியை வராமல் தடுக்க மாத்திரை ஏதேனும் உண்டா? பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

பதில் : வயதான காலத்தில், முக்கியமாக இரவில் கால்களில் ஒரு சிலருக்கு வலி ஏற்படுவதுண்டு. வலி ஒரு சில வினாடிகள்தான் இருக்கும் என்றாலும், சிலரால் இந்த வலியைத் தாங்க முடியாமல் துடித்துப் போய்விடுவார்கள். இதற்கு இன்னமும் சரியான

காரணம் கண்டறியப்படவில்லை. ஒரு சில மாத்திரைகளினாலும் இம்மாதிரி வலி வரலாம். உதாரணம் : ஸ்டீராய்டு மாத்திரை, நீர் மாத்திரை, இரத்தத்தில் உள்ள கொழுப்பு குறைக்கும் ஸ்டேட்டின் மாத்திரை. சிலருக்கு கோடை காலத்தில் அதிகமாக வியர்த்துக்கொட்டும் போது, உடலில் உள்ள உப்பு மற்றும் நீர் அதிகமாக வெளியேறும்போது கால்களில் வலி வரலாம். உப்பு கலந்த தண்ணீரைக் கொடுத்தால் வலி குறைந்துவிடும். எனினும் முதுமையில் ஏற்படும் வலிக்கு வைட்டமின் ஈ (Evion-400 mg) மாத்திரையை தினமும் இரவில் ஒன்று என்று ஒரு மாதம் எடுத்துக்கொண்டால் வலி வருவதும் குறையும். இதற்கு தக்க பலன் கிடைக்கவில்லை என்றால் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள் (044-26267282-044=26412030). நான் வேறு சில மருந்துகளின் விபரம் தெரிவிக்கிறேன். குறிப்பு : உங்களின் கேள்வி உங்களைப் போன்ற வலியால் அவதிப்படும் பல முதியவர்களுக்கு பயனளிக்கும் என்று எண்ணுகிறேன்.

**திருமதி டி. பட்டம்மாள், வயது 66, சின்ன சேலம்**

**கேள்வி** : எனக்கு சர்க்கரை நோய் பல வருடங்களாக உண்டு. விடாமல் மாத்திரைகளை சாப்பிடுவதால் நோய் கட்டுக்குள் இருக்கிறது. ஒரு நாள் திடீரென்று வயிற்றில் ஏதோ ஒரு சங்கடம் என்று டாக்டரிடம் சென்றேன். அவர் வயிறு ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு பித்தப்பையில் கற்கள் இருப்பதாகவும், அதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கூறினார். எனக்கு ஆபரேசனுக்கு விருப்பம் இல்லை. பித்தப்பையில் கல் எதனால் வருகிறது? அதற்கு ஆபரேசன் அவசியம்தானா? என் மனம் ஒரே குழப்பத்தில் உள்ளது. உங்கள் பதில் என் குழப்பத்தைப் போக்கும் என்று எண்ணுகிறேன்.

**பதில்** : பித்தப்பையில் கற்கள் ஏற்படுவதற்கு இன்னமும் சரியான காரணம் கண்டறியப்படவில்லை. கீழ்க்கண்டவர்களுக்கு பித்தப்பையில் கற்கள் வர அதிக வாய்ப்புள்ளது.

- வயதானவர்கள்
- பெண்கள்
- உடற்பருமன் உள்ளவர்கள்
- நீரிழிவு நோய் உள்ளவர்கள்
- கல்லீரல் பாதிக்கப்பட்டவர்கள்
- சில மருந்துகளின் பக்க விளைவுகள்

உணவு முறைகளுக்கும், பித்தப்பையில் கற்கள் உண்டாவதற்கும் தொடர்பு உள்ளதா எனப் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. உணவில் அதிக கொழுப்புச் சத்து, கலோரி மற்றும் மாவுச்சத்து மற்றும் குறைவான நார்ச்சத்து உண்பவர்களுக்கு பித்தப்பையில் கற்கள் வரலாம் (இன்னமும் உறுதி செய்யப்படவில்லை) என்று கூறுகிறார்கள். ஆனால் மிகவும் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை (சீனியை உண்பவர்களுக்கு பித்தப்பையில் கற்கள் ஏற்படலாம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது). மேலும் மது (சிறிதளவு) அருந்துவதற்கும் பித்தப்பையில் கற்கள் ஏற்படுவதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் ஆராய்ச்சி நிரூபிக்கிறது

ஒரு முறை வயிற்று வலி ஏற்பட்டு, அதற்கு பித்தப்பையில் கற்கள்தான் காரணம் என்றால் அறுவை சிகிச்சையே சிறந்தது. தற்பொழுது நுண் குழாயை வயிற்றில் சிறிய துவாரம் மூலம் செலுத்தி எளிதாக கற்களை அகற்றி விடலாம். இம்முறையில் ஆபத்து ஏதும் அதிகம் இல்லை. தைரியமாக செய்து கொள்ளலாம். மருந்து, மாத்திரைகளின் மூலம் எளிதில் கற்களை கரைக்க முடியாது. ஆகையால் துணிந்து அறுவை சிகிச்சை செய்து கொள்ளுங்கள். வாழ்நாள் முழுவதும் பித்தப்பையில் உண்டாகும் தொல்லைகள் ஏதுமின்றி நலமுடன் வாழ்வீர்கள்.

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : **22–09–1981** செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : **14.19** IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : **1** அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| உயரம் / நிறம் | : **5.6** அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : **98430 79736**
தாய் : திலகவதி செல் : **9047034549**

❖❖❖❖❖